**கட்டுவன பிரதேச சபை**
**அம்பாந்தோட்டை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கட்டுவன பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2010 சனவரி 19 ஆந் திகதிய PED/54 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின்படி 2011 சனவரி 01 ஆந் திகதி முதல் உள்ளூராட்சி நிறுவனங்களினால் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நாட்குறிப்புப் பதிவு இலக்கம் 51 இன் மூலம் ரூபா 162,350 படி இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணக் கணக்கு வரவு வைக்கப்பட்டு மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான பேரேட்டில் பேணப்பட்ட மேற்கூறப்பட்ட இரண்டு கணக்குகளுக்கும் ரூபா 162,350 வீதம் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் வங்கியினால் நிலையான கட்டளையொன்றின் மூலம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 122,313 தொகையான பெறுமதி சேர் வரி மீளாய்வாண்டின் கணக்குகளில் சீராக்கும் போது காசுக் கணக்கில் செலவு வைத்து பிரதான காசேட்டின் மூலம் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாது பிழையாக அத்தொகை பெறுமதிசேர் வரி கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் பராமரிக்கப்படுகின்ற வீதி விளக்குகளுக்காக மீளாய்வாண்டிற்குரிய பற்றுச் சீட்டிடப்பட்ட வருமானம் ரூபா 98,600 ஆக இருந்த போதிலும் ரூபா 149,637 தொகை வருமானச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 463,182 கூட்டுத்தொகையான வருமானம், வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2012 ஆம் ஆண்டிற்குரியதாகக் கிடைத்த ரூபா 336,734 கூட்டுத்தொகையான வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 218,835 தொகையான செலவினம் மீளாய்வாண்டின் செலவினத்திலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(எ) நிலையான சொத்துக்களை கணக்கீடு செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. துரித அபிவிருத்தி (1999) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 06 சொத்து விடயங்களின் பெறுமதியான ரூபா 3,022,169 தொகை மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத தென்னேஹேன காணி HE-9586 என்ற 4500 லீற்றர் தண்ணீர் பவுசர் மற்றும் HE - 9614 என்ற 4500 லீற்றர் தண்ணீர் பவுசர் போன்ற சொத்துக்களின் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மித்தெனியா ராஜபக்ஷ சுபிரி சந்தைத் தொகுதியின் பெறுமதி ரூபா 6,255,222 ஆக இருந்த போதிலும் ரூபா 40,899,765 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

iii. நிலையான சொத்துப் பதிவேட்டிற்கும் பட்டோலைகளுக்குமிடையே ரூபா 204,950 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,146,224 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,167,843 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| i. | வீதவரியும் வரியும் | 41 | 35 | 02 |
| ii. | வாடகை | 18,007 | 12,572 | 1,138 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,089 | 1,410 | - |
| iv. | ஏனைய வருமானம் | 38,043 | 38,309 | 13,122 |

### 2.2.2 ஆதன வரி

சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்திப் பிரதேசமாக கருதப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள ஆதனங்களிலிருந்து 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் படி ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 மித்தெனிய கடைத் தொகுதிக் கட்டிடத்தின் கடைகளை வாடகைக்கு விடல்

(அ) மீள் மதிப்பீடு செய்யப்படாமை

மித்தெனிய கடைத்தொகுதியின் தரை மாடி, முதலாம் மாடி, கடைகள் மற்றும் இரண்டாம் மாடியின் கூட்ட மண்டப் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த அறிக்கை 2008 ஒக்தோபர் 29 ஆந் திகதி சபைக்குக் கிடைத்திருந்தது. இந்த மதிப்பீட்டு அறிக்கை இரண்டு வருடங்களுக்கு மாத்திரம் செல்லுபடியாக இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடைத் தொகுதியின் இரண்டாம் மாடி (கூட்ட மண்டம்) வாடகைக்கு விடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கூட்ட மண்டபத்தின் மாதாந்த வாடகை ரூபா 25,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. உள்ளுராட்சி ஆணையாளரின் 2011 நவம்பர் 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/1 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் படி கூட்ட மண்டபத்தை வாடகைக்கு வழங்கும் போது ஒரே தடவையில் சேரும் பணம் ரூபா 2,500,000 ஆக பெறப்பட வேண்டியிருந்த போதிலும் வாடகையாளர்களிடமிருந்து 2012 மார்ச் 26 ஆந் திகதி ரூபா 1,500,000 தொகை மாத்திரம் ஒரே தடவையில் சேரும் பணமாக பெறப்பட்டிருந்தது.

ii. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 173 ஆம் பிரிவின் படி வாடகையாளருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் வாடகையாளருடன் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

iii. 2012 மார்ச் 26 ஆந் திகதி ஒரே தடவையில் சேரும் பணமாக ரூபா 1,500,000 தொகையொன்று செலுத்தப்பட்டதன் பின்னர் மாதாந்தம் ரூபா 25,000 வீதம் வாடகைப் பணம் செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் எவ்வித வாடகைப் பணமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதன்படி 19 மாதங்களுக்காக நிலுவை வாடகைப் பணம் ரூபா 475,000 ஆக இருந்ததுடன் வாடகை உடன்படிக்கை இல்லாமையினால் நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

iv. 2013 நவம்பர் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வாடகையாளரினால் கூட்ட மண்டபத்தில் பல்வேறு பகுதிகளை ஒன்றுசேர்த்து பல்வேறு நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த நிர்மாணப் பொருட்கள் அங்காங்கே போடப்பட்டிருந்தமையால் கட்டிடம் மிக மோசமாக அசுத்தமடைந்திருந்தது. இவ்வாறு கட்டிடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களுக்காக திட்டமொன்று சமர்ப்பிக்கப்பட்டு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 49 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின்படி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக சபையினாலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடைத்தொகுதியின் முதலாவது மாடியில் 22, 23, 24, 25 கடைகளை வாடகைக்கு விடல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மேற்கூறப்பட்ட கடைகளுக்காக வாடகையாளர்களிடமிருந்து 2012 மார்ச் 26 ஆந் திகதி ஒரே தடவையில் சேரும் பணமாக கடையொன்றுக்காக ரூபா 200,000 வீதம் 04 கடைகளுக்காக ரூபா 800,000 தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வாறு ஒரே தடவையில் சேரும் பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 173 ஆம் பிரிவின் படி வாடகையாளருடன் உடன்படிக்கை செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் வாடகையாளருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. ஒரே தடவையில் சேரும் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வாடகையாளரினால் ஒரு கடைக்காக மாதாந்தம் செலுத்த வேண்டிய ரூபா 2,000 வீதம் ரூபா 8,000 வாடகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி இந்த கடைகளுக்காக கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் 19 மாதங்களுக்காக நிலுவை கடை வாடகைப் பணம் ரூபா 152,000 ஆக இருந்தது. வாடகை உடன்படிக்கை இல்லாமையினால் இந்த நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) முதலாவது மாடியின் நிலுவைக் கடை வாடகை

---

07 கடைகளிலிருந்து ரூபா 242,370 கூட்டுத்தொகையான பணம் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் நிலுவையாக இருந்த போதிலும் அந்த நிலுவைப் பணத்தை அறவிடுதல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடைத் தொகுதியின் தரைமாடியில் மக்கள் வங்கிக்காக வழங்கப்பட்ட கடையின் வாடகை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கடையின் மாதாந்த மதிப்பீடு ரூபா 30,000 ஆக இருந்ததுடன் அதன்படி பெறவேண்டிய ஒரே தடவையில் சேரும் பணம் ரூபா 3,000,000 ஆக இருந்த போதிலும் அவ்வாறு ஒரே தடவையில் சேரும் பணம் பெற்றுக்கொள்ளப்படாமல் கடை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

ii. இந்த மதிப்பீடு இரண்டு வருடங்களுக்கு மாத்திரம் செல்லுபடியாகும் என மதிப்பீட்டாளரினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் 10 வருடங்களுக்காக வாடகைப் பணம் பெறப்பட்டிருந்தது. அதன்படி மீள மதிப்பீட்டாளரினால் வாடகையை அதிகரித்து அறவிடுவதற்கிருந்த சந்தர்ப்பம் தவறியிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 நவம்பர் 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் படி மதிப்பிடப்பட்ட வாடகைப் பணம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தம் செய்யப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 10 வருடங்களுக்கு வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வாடகைப் பணம் பெறப்பட்டமையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும் முடியாதிருந்தது.

(ஊ) கடைத் தொகுதியின் முதலாவது மாடியின் 20 மற்றும் 21 ஆம் கடைகளை வாடகைக்கு விடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 20 ஆம் இலக்க கடை ரூபா 2,000 தொகையான மாதாந்த வாடகையில் வாடகையாளரொருவருக்கு 2010 யூலை 07 ஆந் திகதி உடன்படிக்கை செய்து வழங்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் எவ்வித தொகையும் வாடகையாக அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. 21 ஆம் இலக்க கடை 2010 யூலை மாதம் முதல் வங்கியினால் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஒரே தடவையில் சேரும் பணம் மற்றும் வாடகைப் பணம் என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் ரூபா 278,000 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 பஸ் நிலைய மேல்மாடி கடைகளை வாடகைக்கு விடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2012 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீட்டின் மூலம் வாடகை திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் புதிய மதிப்பிடப்பட்ட வாடகைப் பணத்தின் படி உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 09 கடைகளிலிருந்து ரூபா 568,608 கூட்டுத்தொகையொன்று 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த போதிலும் இந்த நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 பழைய கடைகளை வாடகைக்கு விடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை 2012 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீடொன்றின் மூலம் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் புதிய மதிப்பீடு செய்யப்பட்ட வாடகைப் பணத்திற்குரிய உடன்படிக்கை நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 02 ஆம் இலக்க கடையின் மாதாந்த வாடகை ரூபா 3,500 ஆக இருந்ததுடன் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை 31,550 ஆகும். 05 ஆம் இலக்க கடையின் மாதாந்த வாடகை ரூபா 2,750 ஆக இருந்ததுடன் 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 33,000 ஆக இருந்தது. அதன்படி முறையே 09 மாதங்களுக்கும் 12 மாதங்களுக்கும் உரியதாக நிலுவை வாடகைப் பணம் காணப்பட்ட போதிலும் இந்த நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 அறவிடப்படாதுள்ள ஒரே தடவையில் அறவிடும் பணம்

உள்ளூராட்சி ஆணையாளரின் 2011 சனவரி 01 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின்படி பணம் அறவிட வேண்டியிருந்ததுடன் அவ்வாறு

ஒரே தடவையில் செலுத்த முடியாத வாடகையாளர்களிடமிருந்து பணம் 06 தவணைகளில் ஆகக் கூடியது 06 மாத காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் இரண்டு வாடகையாளர்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையிலும் ரூபா 137,537 ஒரே தடவையில் செலுத்தவேண்டிய பணம் அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.7 காணி விற்பனை வரி

வெளி நபரொருவரினால் இரண்டு சந்தர்ப்பங்களின் போது காணி கூறுகளாக்கப்பட்டு விற்பனை செய்வதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 154(1) ஆம் பிரிவின் படி காணி விற்பனைத் தொகையில் 1 சதவீத கட்டணமொன்றை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.8 வாகன வருமானம்

சபைக்குரிய மோட்டார் கிறேடர் இயந்திரம், செப்பனிடும் உருளை, பெகோ இயந்திரம் மற்றும் வான் வண்டி என்பன வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 719,089 வாடகைப் பணம் அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.9 நீர்க் கட்டணம்

சபையினால் பேணப்படுகின்ற நீர் செயற்திட்டத்திற்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 5,158,103 தொகையான நீர்க் கட்டணம் அறவிடவேண்டியிருந்தது.

### 2.2.10 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினர்களிடமிருந்தும் நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 6,700,516 கூட்டுத்தொகையானது கிடைக்கவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

தலைவரினால் கணக்காய்வுத் திகதியான 2013 நவம்பர் 08 ஆந் திகதி வரையில் 2013 ஆம் ஆண்டில் 11 நியமனங்கள் வழங்கப்பட்டு சம்பளம், படிகள் மற்றும் சேமலாப நிதியமாக ரூபா 1,478,018 கூட்டுத்தொகையானது சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(1)(1) ஆம் பிரிவின்படி அந்த நியமனங்களை வழங்குவதற்காக உள்ளூராட்சி ஆணையாளரின் எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக ரூபா 555,870 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பழுதுபார்த்தல்களை உரிய பிரகாரம் நிறைவேற்றப்பட்டமைக்கு மோட்டார் வாகன பரிசோதகரின் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீண்ட காலம் முதல் நிலுவையாகக் காணப்படுகின்ற ரூபா 73,279 கூட்டுத்தொகையான இடர்கடன், விஷேட மற்றும் விழா முற்பண மீதிகளை 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) இரண்டு கெப் வாகனங்கள், இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் வான் வாகனமொன்று என்பன வெளி நிறுவனங்களிலிருந்து பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த சொத்துக்களின் உரித்தை பிரதேச சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சனாதிபதி செயலாளரின் 2013 யூன் 05 ஆந் திகதிய PCMD/RR/2013 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பாவனைக்கு எடுக்காது அழிவடைந்து காணப்படுகின்ற பழைய வாகனம் மற்றும் இயந்திர உபகரணங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்திருந்த போதிலும் நீண்ட காலம் முதல் விளைவற்றுக் காணப்படுகின்ற கெப் வண்டி மற்றும் ஒரு டெரெக்ரர் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஊழியர் கடன் நிர்வாகம்
(உ) வாகன நிர்வாகம்